வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 29.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள் ()*

பிரதமர் திரு நரேந்திர மோடி, மாநிலங்களின் காவல் துறை தலைவர்கள் மாநாட்டில் இன்றும், நாளையும் பங்கேற்கிறார்.

இந்தியா வளர்ச்சி பாதையில் முன்னேறி வரும் வேகத்தை கருத்தில் கொண்டு இளைஞர்கள் உற்சாகமாக இருப்பது மிகவும் முக்கியம் என்று மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

டித்வா புயலை எதிர்கொள்ள தமிழகம், புதுச்சேரி மற்றும் ஆந்திராவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன.

பிரதமர் திரு. நரேந்திரமோடி நாளை ஆகாஷ்வாணியின் மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம், மக்களுடன், தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறார்.

*குடியரசு துணை தலைவர் (5)*

குடியரசு துணை தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் நாளை குருஷேத்ராவிற்கு செல்கிறார். அங்குள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் 20 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளும் திரு

இராதாகிருஷ்ணன், சர்வதேச கீதை மகோத்சவத்தை ஒட்டி, அங்கு நடைபெறும் அகில பாரதிய தேவஸ்தான சம்மேளனத்திலும் பங்கேற்கிறார்.

மோடி-மாநாடு (3)

மாநிலங்களின் காவல் துறை தலைவர்கள் பங்கேற்றுள்ள 3 நாள் மாநாடு சத்தீஸ்கர் மாநிலம் ராய்பூரில் நேற்று தொடங்கி நடைபெற்று வருகிறது. இதுகுறித்த கூடுதல் தகவல்கள்.............

(வாய்ஸ்)

மோடி-மாநாடு (16)

(வாய்ஸ்)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெறும் காவல் துறை தலைவர்களின் 60 ஆவது தேசிய மாநாட்டின், இரண்டாம் நாளான இன்று உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்துவது தொடர்பான அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும், தீவிரவாத ஒழிப்பு, பெண்கள் பாதுகாப்பு, காவல் துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. சிறப்பாக பணியாற்றிய அதிகாரிகளுக்கு,

குடியரசு தலைவர் பதக்கத்தை திரு நரேந்திர மோடி வழங்குகிறார். இம்மாநாட்டினை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, இந்திய தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் நேற்று தொடக்கி வைத்தார். வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான பாதுகாப்பு பரிமாணங்கள் என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும். பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் மற்றும் பல்வேறு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த இயக்குநர்கள், மத்திய பாதுகாப்பு அமைப்புகளின் தலைவர்கள், உள்ளிட்டோர் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். நாளை நடைபெற உள்ள நிறைவு நாள் அமர்வுகளிலும் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

*ராஜ்நாத் சிங்* (15)

இந்தியா தற்போது வளர்ச்சி பாதையில் முன்னேறி வரும் வேகத்தை கருத்தில் கொண்டு இளைஞர்கள் உற்சாகமாக இருப்பது மிகவும் முக்கியம் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். உத்ராகண்ட் மாநிலம் முசோரியில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகடமியில் இன்று நடைபெற்ற நூறாவது அடிப்படை பயிற்சி நிறைவு விழாவில் உரையாற்றிய திரு ராஜ்நாத் சிங், 2047 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக முன்னேற்றும்

இலக்கில், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் சமமாக பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்தியாவில் பெண்கள் சக்தி நாட்டின் வளர்ச்சி பயணத்தில் பங்களிக்க முழுமையாக தயாராக இருப்பதாகவும், பெண்களால் அடைய முடியாத நிலை என்று எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார். மேலும், மனித குலம் பல தார்மீக சவால்களை எதிர்கொள்ளும் நேரத்தில், வளர்ந்த இந்தியா என்ற இலக்கினை அடைய தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும் அரசு ஊழியர்கள் நமக்கு தேவை என்றும், பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

*நிர்மலா சீதாராமன்* (6)

நாடு விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். நடப்பு நிதியாண்டின் 2 ஆவது காலாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி 8.2 சதவிகிதமாக உயர்ந்துள்ளதை அவர் சுட்டிக் காட்டி உள்ளார். மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திருமதி சீதாராமன் சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ்* (7)

செமி கண்டக்டர் துறையில் உலகின் முன்னணி நாடாக இந்தியா விரைவில் மாறும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். பஞ்சாப் மாநிலம் மொகாலியில் செமி கண்டக்டர் பயிற்சி ஆய்வகத்தை திறந்து வைத்து பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு திட்டத்தின் கீழ், பஞ்சாப் மாநிலம் செமி கண்டக்டர் உற்பத்தியின் தலைமையகமாக விரைவில் மாறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*டித்வா – இலங்கை (6)*

டித்வா புயல் இலங்கையில் பேரழிவை ஏற்படுத்தி உள்ளது. விமானப்படை விமானம் மூலம் 21 டன் நிவாரண பொருட்களை இந்தியா அந்நாட்டிற்கு அனுப்பி வைத்துள்ளதாக வெளியுறவுத் துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய பேரிடர் மீட்பு படையை சார்ந்த 80 பேரும் நவீன கருவிகளுடன் அந்த விமானம் மூலம் கொழும்பு சென்றடைந்திருப்பதாகவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

*டித்வா 1 (7)*

டித்வா புயல் தமிழகத்தின் வட தமிழக கடலோர பகுதியை நோக்கி நகர்ந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கன மழையும், சில இடங்களில் அதி கன மழையும் பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. புயல் குறித்த மேலும் சில தகவல்கள்.......

(வாய்ஸ்)

டித்வா 2 (18) (வாய்ஸ்)

டித்வா புயல் காரணமாக தமிழகம், மற்றும் ஆந்திராவில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன. புதுச்சேரியிலும் புயல் பாதிப்புகளை எதிர் கொள்வதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காரைக்கால் மாவட்டத்தில் நேற்றிரவு தொடங்கி கனமழை பெய்து வருவதால், தாழ்வான பகுதி மற்றும் கடலோர மீனவ கிராமங்களில் பாதிப்புகள் ஏற்பட்டால் பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைக்கும் வகையில் 91 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு உணவுகள் வழங்க ஏற்பாடுகள்

செய்யப்பட்டு வருவதாகவும் குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன் கூறியுள்ளார். முன்னதாக, தேசிய பேரிடர் மீட்பு படையினர் மாவட்ட சார்பு ஆட்சியர் பூஜா உள்ளிட்டோர் பங்கேற்ற அவசர ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது, புயல் பாதிப்புகளை எதிர் கொள்ள மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் இருக்க வேண்டும் எனவும், பொதுமக்களிடமிருந்து வரும புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் திரு திருமுருகன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பொதுமக்கள் தேவைப்படும் உதவிகளுக்கு 1070, 1077

டித்வா 3 (15)

என்ற மாவட்ட நிர்வாக கட்டுப்பாட்டு அறை எண்களை தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, டித்வா புயல் காரணமாக காரைக்கால் தனியார் துறைமுகத்தில் 5 ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் கடல் பகுதிக்கு செல்ல வேண்டாம் என மீன் வளத்துறை அறிவுறுத்தி உள்ளது. டித்வா புயல் காரணமாக புதுச்சேரி நல்லவாடு மீனவ கிராமத்தில் கடல் அலைகள் சீற்றத்துடன் 10 அடிக்கு மேல் எழும்புவதால் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் 50 அடி தொலைவில் 500 படகுகளை பாதுகாப்பாக

நிறுத்தி வைத்துள்ளனர். நோனாங்குப்பம் சுண்ணாம்பாற்றில் உள்ள படகு குழாமில் படகுகள் அனைத்தும் கரையோரம் உள்ள மரங்களில் கட்டி பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. டித்வா புயல் காரணமாக மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்லாமல் மீன் பிடி வலைகளையும், படகுகளையும் பாதுகாத்து வருகின்றனர். டித்வா புயல் காரணமாக காரைக்கால் மாவட்டத்திற்கு அரக்கோணத்தில் இருந்து 30 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் மீட்பு பணியில் ஈடுபட தயாராக உள்ளனர்.

*மன் கீ பாத்* (14)

பிரதமர் திரு. நரேந்திரமோடி நாளை ஞாயிற்றுக் கிழமை, ஆகாஷ்வாணியின் மன் கீ பாத் நிகழ்ச்சி மூலம், இந்தியா, மற்றும், உலகெங்கிலும் உள்ள மக்களுடன், தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறார். பிரதமரின் இந்த 128ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, காலை 11 மணிக்கு, ஆகாஷ்வாணி, மற்றும், தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR-News இணைய தளம் மற்றும் News-on-Air மொபைல் செயலியிலும் ஒலிபரப்பாகும். AIR-News, DD-News, பிரதமர் அலுவலகம், மற்றும், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை

அமைச்சகத்தின் You-Tube அலை வரிசைகளிலும், இந்நிகழ்ச்சி நேரடியாக இடம்பெறும். ஆகாஷ்வாணியில், மன் கீ பாத் ஹிந்தி ஒலிபரப்பை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவங்கள் ஒலிபரப்பாகும். நாளை இரவு 8 மணிக்கு மனதின் குரல் தமிழ் வடிவம் புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களிலும் மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

எஸ்ஐஆர் (9)

இரண்டாம் கட்ட வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் தொடங்கப்பட்டதில் இருந்து 50 கோடியே, 73 லட்சத்திற்கும் அதிகமான கணக்கெடுப்பு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் இதுவரை, சுமார் 40 கோடி படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரியில், இதுவரை, 10 லட்சத்து 5 ஆயிரத்து 126 படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றில், 8 லட்சத்து, 97 ஆயிரத்து 648 விண்ணப்பங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேட்மிண்டன் நீதிபதிகள் (9)

நீதிபதிகளின் பணி மிகவும் மன அழுத்தம் கொண்டது என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூர்யகாந்த் கூறியுள்ளார். புதுடெல்லியில் நீதிபதிகளுக்கான பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் தொடக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், அனைத்து நீதிபதிகளும் இத்தகைய விளையாட்டுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் 75 உயர்நீதிமன்ற நீதிபதிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் திரு கிரண் ரிஜிஜூ, அர்ஜூன் ராம் மெக்வால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விளையாட்டு (6)

உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று ஓமனை எதிர் கொள்கிறது. இப்போட்டி இன்றிரவு சென்னையில் நடைபெறுகிற உள்ளது.

சர்வதேச இணைய செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேசி தங்கப்பதக்கம் வென்றார். 11 ஆவது சுற்று முடிவில், கூடுதல் புள்ளிகளுடன் அவர் இப்பதக்கத்தை வென்றார்.